தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்தி ஒன்பதாவது கூட்டத்தொடர்.

திங்கட்கிழமை, 1981 மார்ச் 2.

மாசி 19, ரௌத்திரி, 2012 திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 103 ஒத்தி வைக்கப்படுகிறது.

அறநிலையத் துறையில் தமிழாசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு

* 104 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அறநிலையத் துறையில், தமிழாசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) & (இ) வருமானமுள்ள ஆலயங்களில் முதற்கட்டமாக 76 தமிழ் ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களுடைய மாநாட்டிலே—கும்பகோணத்திலே—3 ஆயிரம் தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்தார்கள். ஆனால், 76 பேர்கள்தான் தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டிருப்பதாக இங்கே தகவல் தரப்பட்டிருக்கிறது. அவர்கள்கூட 100 ரூபாய் தான் மாத

ஊதியமாகப் பெறுகிறார்கள். இந்த 100 ரூபாய் ஊதியம் பெறுவதற்கே அங்கே இருக்கக்கூடிய எக்ஸிக்யூட்டிவ் ஆஃபீசர்களிடத்திலே அடிமை வேலை பார்க்கும் அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது போன்று 3,000 தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா? அவர்களுடைய ஊதியம் உயர்த்தப்படுமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு அறநிலையத் துறையின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்க இயலுமா என்பதை அரசு பரிசிலிக்கும் என்ற அளவிலே கருத்தறிவித்தார்கள். இறுதியாகத் தெரிவிக்கவில்லை. அந்தக் கருத்து அறநிலையத் துறைக்கு அனுப்பி பரிசீலிக்கப்பட்டது. பொருளாதாரச் சூழ்நிலையையொட்டி 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு ஊதியம் அளிக்கும் நிலையில் இல்லை என்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டித்தான் லட்சம் ரூபாய்க்கு அதிக வருமானம் இருக்கிற ஆலயங்களில் முதலில் இப்படிப்பட்ட தமிழாசிரியர்களைப் பணியமர்த்துகின்ற முயற்சிகளில் ஈடுபட்டு இப்போது 76 தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 100 ரூபாயிலிருந்து 150 ரூபாய்வரையில்—அவர்கள் பகுதி நேர அலுவலர்களாக இருப்பதால், இந்தச் சம்பளம் தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே ஆசிரியர்கள் அடிமைகளைப் போல நடத்தப்படுகிறார்கள் என்று தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருப்பதாக எங்களுக்குத் தகவல் இல்லை. இந்தக் கருத்தையொட்டி அப்படி எங்கேயாவது நடைபெறுகிறது என்று திட்டவட்டமாகக் குறிப்புகளைத் தந்தால், தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: 3 ஆயிரம் தமிழாசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்று ஆளுநர் அவர்கள் உரையின் மீது பேசியபோது நான் சொன்னதற்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தச் செயற்குறிப்பு இப்போது பரிசீலனையில் இருக்கிறது, பிற்காலத்திலே செயல்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதை ஏற்று 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளிப்பார்களா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே தெரிவித்த கருத்தை இப்போது அவர்களே மாற்றிக்கொண்டதற்காக நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் இருப்பதாக இந்த அவையிலே தெரிவித்தார்கள் என்று

குறிப்பிட்டார்கள். அந்தச் செயற்குறிப்பு பரிசிலனையில் இருக்கிறது. எவ்வளவு பேரை நியமிக்க முடியும் என்பதுதான் அந்தப் பரிசிலனையினுடைய முடிவாக இருக்கும்.

திரு. செ. முத்துசாமி : தமிழை மேம்படுத்த வேண்டும், கௌரவிக்க வேண்டும் என்று தமிழுக்காக இந்த அரசு நல்லமுறையிலே உலகத் தமிழ் மாநாடு நடத்தியிருக்கிறது. அதற்காக இவ்வளவு தொகை செலவழிக்கும் நல்லெண்ணத்தில் நாம் இருக்கும்போது, 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு வேலைவாய்ப்பளிப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொள்கையாக அறிவித்ததை ஏற்று, பரிசிலனையில் இருக்கிறது என்று சொல்லாமல், பொருளாதாரச் செலவைப் பார்க்காமல், 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்தைச் செயற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : பரிசிலனையிலே இருக்கிறது என்று சொல்லாமல், பொருளாதாரச் செலவைப் பார்க்காமல், இதிலே ஈடுபட வேண்டும், ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். சம்பளம், ஊதியம் கொடுக்க வேண்டுமென்று வருகிறபோது; பொருளாதாரச் செலவைப் பார்க்காமல் எப்படி முடிவெடுக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : வருவாய் உள்ள கோயில்களாகப் பார்த்து தமிழாசிரியர்களை நியமிப்பதைக் காட்டிலும், வருவாய் இல்லாத கோயில்களுக்கு தமிழாசிரியர்களை நியமிப்பதன் மூலம் ஸ்தல புராணங்களையெல்லாம் நல்ல முறையில் சொல்லிக்கொடுத்து, அதன் மூலம் அந்தக் கோயில்களுக்கு வருவாய் அதிகமாக வர வழி ஏற்படும் என்பதால், வருவாய் குறைந்த கோயில்களுக்கு தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : வருவாய் இல்லாத கோயில்களுக்கு தமிழாசிரியர்களை நியமித்தால், அவர்களுக்கு உள்ள ஊதியத்தை எங்கேயிருந்து எடுத்துக் கொடுப்பது என்பதுதான் இப்போது உள்ள பிரச்சினை.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கட்கு கல்விக்கடன்.

*** 105 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரிகளில் மற்றும் பல் தொழில்நுட்பப் பயிலகங்களில் படிக்கும் அரசு ஊழியர்களின் பிள்ளைகளின் கல்விச் செலவுக்காக கடன் வழங்க வகை செய்யும் அரசாணை எண் 1954, உள்ளாட்சித்துறை, நாள் 13—12—1979